## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 170/ந/2025

நாள் 13.11.2025

த.வே. கஸ்தூரி,
தர்மபுரி,
தர்மபுரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
தர்மபுரி நகராட்சி,
தர்மபுரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி , இராமாபோர்டிங் பின்புறம், காந்தி நகர், முதல்தெரு, கதவு எண்.81U, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. த.வே. கஸ்தூரி என்பவரின் 27.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2025 அன்று பெறப்பட்டு, 170/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி, இராமாபோர்டிங் பின்புறம், காந்தி நகர், முதல்தெரு, கதவு எண்.81U, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. த.வே. கஸ்தூரி என்பவர் தனது 27.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“தர்மபுரி மாவட்டம், காந்தி நகர் முதல் தெருவில் வசிக்கும் திரு. மோகன் த/பெ. சுப்பிரமணி என்பவர் பாதைக்காக விடப்பட்ட 15 அடி ரோட்டில் கான்கிரிட் திட்டு மற்றும் போர்டிகோ அமைத்து ஆக்கிரமிப்பு செய்வது தொடர்பாகவும், அத்தெருவில் மின் கம்பத்தில் மின்விளக்கு இல்லாதது குறித்தும் நானும் பொது மக்களும் பல மனுக்கள் அளித்தும் நகராட்சி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் மனு அளித்தும், முதல் மேல்முறையீட்டு மனு அளித்தும் எவ்வித பதிலும் அளிக்காததால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரிவு 19 (3) ன் கீழான 07.07.2023ல் தகவல் ஆணையருக்கு இரண்டாம் மேல்முறையீடு செய்தேன்.

அதன் பேரில் 20.12.2024 அன்று சென்னை ஆணையர் முன் 20.12.2024 அன்று நானும் பொது தகவல் அலுவலர் (பொ) திரு. முத்துக்குமார் அவர்கள் முன் ஆஜரானோம். பொதுத்தகவல் அலுவலர் ஆணையர் முன் 2 மாதத்தில் முடித்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

தர்மபுரி நகராட்சி அலுவலகத்தில் இருந்து, அலுவலர் மற்றும் சில நபர்கள் 29.01.2025 அன்று மாலை சுமார் 3.00 மணிக்கு ஆக்கிரமிப்பு இடத்திற்கு வந்து Formality–க்காக பாதையில் உள்ள ஆக்கிரமிப்பு பாகம் கொஞ்சம் மட்டும் இடித்துவிட்டு நாளை வருவதாகசொல்லி சென்றுவிட்டார். பல நாட்கள் தொலைபேசியிலும் அலுவலகம் நேரில் சென்று தொடர்புகொண்டும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் மீண்டும் 20.02.2025ல் தர்மபுரி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு செய்தேன். அதற்கும் இன்று வரை எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை என்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே அய்யா அவர்கள், ஏற்கனவே 20 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீட்டை ஆல்டர்ரேஷன் செய்யும்போது, பொதுமக்கள் போக்குவரத்துக்காக, பாதைக்காக விடப்பட்ட 15 அடி அகல ரோடில் திரு. மோகன் த/பெ. சுப்ரமணி என்பவர் சுமார் 30.00 ச.அடி பரப்பளவில் (20" 00" x 1"50") கான்கிரிட் திட்டு சாலையில் மற்றும் போர்டிகோ அமைத்து ஆக்ரமிப்பு செய்துள்ள இடத்தை அகற்றி மீட்டுத்தருமாறு பணிவுடன் கோருகிறேன். மின்கம்பத்தில் இன்று வரை டியூப்லைட் பொருத்தப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தர்மபுரி நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) தர்மபுரி நகராட்சி ஆணையாளர் தனது கடித ந.க.எண்.001347/2025/எப்1, நாள் 12.06.2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் 2005–ன் கீழ் பெறப்பட்ட மேல் முறையீட்டின் கீழ் தகவல்கள் நாள் 21.06.2023 மற்றும் 02.09.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக அறிவிப்பு 21.11.2024 அன்று ஆக்கிரமிப்புகளை தாங்கள் அப்புறப்படுத்துமாறு மேற்படி சட்டப்பிரிவு 128 (2)–ன் படி திரு. எஸ். மோகன் த/பெ. சுப்பிரமணி என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

திருமதி. த.வே. கஸ்தூரி என்பவர் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தொடர்ந்த வழக்கு எண்.SA 14240/D/2023–ல் 20.12.2024 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்னிலையில் மேற்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேலாளர் மற்றும் பொது தகவல் அலுவலர் (பொ) திரு. ரா. முத்துக்குமார் அவர்கள் விசாரணையில் நேரில் ஆஜர் ஆகி உரிய பதில் அறிக்கையினை சமர்ப்பித்து மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிக்கு இரண்டு மாத கால அவகாசம் பெறப்பட்டது.

மனுதாரர் திருமதி. த.வே. கஸ்தூரி அவர்களின் கடிதத்தில் ஆக்கிரமிப்பு அகற்றகோரி 30.12.2024ல் மனு செய்துள்ளார்.

வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு 20.01.2025 அன்று அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் உத்தேச இடத்தை நகர்சார் ஆய்வர் அவர்களை அளவீடு செய்து அதன் அறிக்கையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகர்சார் ஆய்வர் அவர்களின் அறிக்கையில் நகராட்சி வார்டு எண்.27, காந்தி நகர் முதல் தெரு கதவு எண்.18A முன்பகுதியில் உள்ள இடத்தில் சுமார் 30.00 ச. அடி பரப்பளவில் 20’00” x 1’50” அடி என்ற அளவில் கான்கிரிட் திட்டு சாலையில் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை நகராட்சி பணியாளர்களை கொண்டு 29.01.2025 அன்று மாலை 3.30 மணியளவில் அகற்றப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது” எனத்தெரிவித்துள்ளார்.

4) இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தர்மபுரி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 08.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 30.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரரான திருமதி. த.வே. கஸ்தூரி 30.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரில் ஆஜராக இயலவில்லை என 30.06.2025 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் தனது உடல்நிலை குறித்து தெரிவித்து தனக்கு வேறொரு நாளில் விசாரணை தேதி வழங்குமாறு கோரியுள்ளார்.

6) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மேற்படி விசாரனை 23.09.2025க்கு ஒத்திவைக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 04.07.2025 அன்று விசாரணைக்கான அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7) மனுதாரர் திருமதி. த.வே.கஸ்தூரி 23.09.2025 நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“தர்மபுரி மாவட்டம் காந்தி நகர் முதல் தெருவில் வசிக்கும் திரு. மோகன் த/பெ. சுப்பிரமணி என்பவர் பாதைக்காக விடப்பட்ட 15 அடி ரோட்டில் கான்கிரிட் திட்டு மற்றும் போர்டிகோ அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளது தொடர்பாகவும், தெருவில் மின் கம்பத்தில் மின் விளக்கு இல்லாதது குறித்தும் பல மனுக்கள் அளித்தும் நகராட்சி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் மனு அளித்தேன். தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 19 (3) ன் கீழான 07.07.2023ல் தகவல் ஆணையர்க்கு இரண்டாம் மேல்முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 2 மாதத்தில் எனது கோரிக்கையினை முடித்து கொடுப்பதாக நகராட்சி அலுவலகத்தினர் வாக்குறுதி அளித்தனர்.

தர்மபுரி நகராட்சி அலுவலகத்திலிருந்து 29.01.2025 அன்று மாலை அலுவலர்கள் மற்றும் சில நபர்கள் ஆக்கிரமிப்பு இடத்திற்கு வந்து நடை பாதையில் உள்ள ஆக்கிரமிப்பின் ஒரு பாகம் மட்டும் இடித்துவிட்டு அடுத்த நாள் வருவதாக சொல்லி சென்று விட்டனர். ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திரு. மோகன் என்பவரால் பாதைக்காக விடப்பட்ட 15 அடி அகல ரோட்டில் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் போர்டிகோ அமைத்துள்ளனர். அந்த போர்டிகோவை இன்றுவரை அகற்றிட

நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், நகராட்சி அலுவலகத்தால் இன்றைய விசாரணையில் 22.01.2025–ல் புலதணிக்கை மேற்கொண்டதாகத் தெரிவித்து தாக்கல் செய்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2785/23/அ2 நாள் 17.12.2024–ல் மின்கம்பத்தில் டியூப் லைட் பொருத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் இன்றுவரை டியூப் லைட் பொருத்தப்படவில்லை. மேற்படி கம்பத்தில் டியூப் லைட் பொருத்தி தருமாறு கோருகிறேன்.

தர்மபுரி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2386/2024/எப்4, நாள் 21.11.2024–ல் தெரிவிக்கப்பட்டவாறு திரு. மோகன் என்பவரால் பாதைக்காக விடப்பட்ட 15 அடி அகல ரோட்டில் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள போர்டிகோவை அகற்றிட நடவடிக்கை மேற்கொண்டு உதவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

8) எதிர்மனுதாரரான தர்மபுரி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்கள் 23.09.2025 இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரரின் புகார் மனுவினை தொடர்ந்து இந்நகராட்சியின் 21.11.2024 தேதியிட்ட அறிவிப்பு மூலம் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துமாறு சட்டப்பிரிவு 128 (2)–ன் படி திரு. எஸ். மோகன் த/பெ. சுப்பிரமணி என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

திருமதி. த.வே. கஸ்தூரி என்பவர் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தொடர்ந்த வழக்கு எண்.SA 14240/D/2023 –ல் 20.12.2023–ன் மீது 20.12.2024 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

வருவாய் வட்டாட்சியர் அவர்கள் மூலமாக உத்தேச இடத்தை நகர்சார் ஆய்வர் அவர்களால் 22.01.2025 அன்று நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் மனுதாரர் திருமதி. த.வே. கஸ்தூரி ஆகியோர் முன்னிலையில் அளவீடு செய்து அதன் அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கையில் மேற்படி நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், மனுதாரர் திருமதி. த.வே. கஸ்தூரி மற்றும் நகர்சார் ஆய்வாளர் ஆகியோரிடம் கையொப்பம் பெறப்பட்டது. அவ்வறிக்கையில் நகராட்சி வார்டு எண்.27, காந்தி நகர் முதல் தெரு கதவு எண்.18A முன்பகுதியில் உள்ள இடத்தில் சுமார் 30.00 ச.அடி பரப்பளவில் 20'00" x 1'50" அடி என்ற அளவில் கான்கிரிட் திட்டு சாலையில் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புக்களை நகராட்சி பணியாளர்களை கொண்டு 28.01.2025 மற்றும் 29.01.2025 ஆகிய தேதிகளில் அகற்றப்பட்டுள்ளதும், போர்டிகோ அன்னாரின் எல்லைக்குள் இருப்பதால் அது ஆக்கிரமிப்பாக நகர்சார் ஆய்வாளரால் குறிப்பிடப்படவில்லை என்ற விவரத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தெருவிளக்கு அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

9) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் தர்மபுரி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

தர்மபுரி மாவட்டம், காந்தி நகர் முதல் தெருவில் வசிக்கும் திரு.மோகன் என்பவர் பாதைக்காக விடப்பட்ட 15 அடி ரோட்டில் கான்கிரீட் திட்டு மற்றும் போர்டிகோ அமைத்து ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாகவும், அத்தெருவில் மின்கம்பத்தில் மின்விளக்கு இல்லாதது குறித்தும் மனுதாரரும், பொதுமக்களும் பல மனுக்கள் அளித்தும் நகராட்சி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005ன்கீழ் மனு அளித்தும், முதல் மேல்முறையீட்டு மனு அளித்தும், எவ்வித பதிலும் அளிக்காததால், தகவல்அறியும் உரிமைச்சட்டம், பிரிவு 19(3)ன் கீழ் 07.07.2023ல் தகவல் ஆணையருக்கு இரண்டாம் மேல்முறையீடு செய்தும், முறையாக நடவடிக்கை எடுக்கப்படாததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியிருப்பது அவரது புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

நகராட்சி அறிவிப்பு 21.11.2024 அன்று ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துமாறு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 128(2)ன்படி திரு.எஸ்.மோகன் த/பெ.சுப்பிரமணி என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதும், திருமதி.த.வே.கஸ்தூரி என்பவர் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தொடர்ந்த வழக்கு எண்.SA.14240/D/2023–ல் 20.12.2024 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்னிலையில் மேற்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அப்போது மேலாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்(பொ) அவர்கள் விசாரணையில் நேரில்ஆஜராகி உரிய பதில் அறிக்கையினை சமர்ப்பித்து மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிக்கு இரண்டு மாத கால அவகாசம் பெறப்பட்டுள்ளதும், வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு, உத்தேச இடத்தை நகர்சார் ஆய்வர் அவர்களை கொண்டு அளவீடு செய்து அதன் அறிக்கையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதும், அதனைத் தொடர்ந்து, நகர் சார் ஆய்வர் அறிக்கையின் அடிப்படையில் நகராட்சி வார்டு எண்.27, காந்தி நகர் முதல் தெரு கதவு எண்.18A முன்பகுதியில் உள்ள இடத்தில் சுமார் 30.00 ச.அடி பரப்பளவில் (20’00” x 1’ 50” ) அடி என்ற அளவில் கான்கிரீட் திட்டு சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அதனடிப்படையில் மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை நகராட்சி பணியாளர்களைக் கொண்டு 29.01.2025 அன்று அகற்றப்பட்டுள்ளது என்பதும், போர்டிகோ திரு.மோகன் என்பவரின் எல்லைக்குள் இருப்பதால் அது நகர்சார் ஆய்வாளரால் ஆக்கிரமிப்பாக குறிப்பிடப்படவில்லை என்பதும், தெருவிளக்கு அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருவதும், நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கையான ஆக்கிரமிப்பு அகற்றுவது ஏற்கப்பட்டு, நகராட்சியினரால் திரு.மோகன் த/பெ.சுப்பிரமணி என்பவர் பாதைக்காக விடப்பட்ட இடத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மற்றொரு கோரிக்கையான தெருவிளக்கு அமைப்பதற்கும் நகராட்சியினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமுலத்தில் தெரிவித்து இருப்பினும், புகாரில் கூறப்பட்டிருக்கும் இடத்தினை வருவாய்த்துறையுடன் இணைந்து மீண்டும் அளந்து

ஆக்கிரமிப்பு முழுவதுமாக அகற்றப்பட்டுள்ளதை உறுதி செய்திடுமாறு தர்மபுரி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. த.வே. கஸ்தூரி,
   81U, முதல் தெரு, காந்தி நகர்,
   இராமாபோர்டிங் பின்புறம்,
   தர்மபுரி – 636 701,
   தர்மபுரி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   தர்மபுரி நகராட்சி,
   தர்மபுரி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்